## தென்மண்டல பல்கலை கழகங்களுக்கு இடையே நடந்த

# மகளிர் ஹாக்கி போட்டியில் சென்னை அணி சாம்பியன்

## மைசூர் அணி இரண்டாமிடம்



தென்மண்டல பல்கலை கழகங்களுக்கு இடையே நடந்த ஹாக்கி போட்டியில் வெற்றி பெற்று கோப்பையுடன் சென்னை அணி.

திருச்சி, டிச.31: தென்மண்டல பல்கலை கழகங்களுக்கு இடையே நடந்த ஹாக்கி போட்டியில் சென்னை அணி சாம்பியன் பட்டம் வென்றது.

தென்மண்டல பல்கலைக் கழகங்களுக்கு இடையே மகளிருக்கான ஹாக்கிப் போட்டி திருச்சி அண்ணா விளையாட்டரங்க செயற்கை புல்தரை ஹாக்கி மைதானத்தில் பாரதிதாசன் பல்கலைக் கழகம் மற்றும் ஹோலி கிரஸ் கல்லூரியுடன் இனைந்து நாக் அவுட் மற்றும் லீக் முறையில் நடந்தது. கோவை, பாரதியார், சென்னை, காட்டாங்குளத்தூர் எஸ்.ஆர்.எம். இன்ஸ்டிடியூட் ஆஃப் சயின்ஸ் அண்ட் டெக்னாலஜி, சென்னை, சென்னை, மைசூர், மைசூர் ஆகிய 4 நான்கு பல்கலைக் கழக அணிகள் அரையிறுதி லீக் போட்டிகளில் விளையாடின. இதில் சென்னை பல்கலைக்கழகம், மைசூர் பல்கலைக்கழகம் இரண்டு போட்டிகளில் வென்று சம புள்ளிகள் (7புள்ளிகள்) எடுத்தது. கோவை, பாரதியார் பல்கலைக்கழகம், காட்டாங்குளத்தூர் எஸ்.ஆர்.எம். இன்ஸ்டிடியூட் ஆஃப் சயின்ஸ் அண்ட் டெக்னாலஜி அணிகள் தலா ஒரு புள்ளி எடுத்தது.

சென்னை பல்கலைக் கழகம் மற்றும் மைசூர் பல்கலைக்கழகம் தலா 7 புள்ளிகள் எடுத்தததால் கோல்களின் விகித அடிப்படையில் சென்னை பல்கலைக்கழகம் முதலிடம் பிடித்து தென்மண்டல பல்கலைக் கழகங்களுக்கு இடையே மகளிருக்கான ஹாக்கிப் போட்டியில் சாம்பியன் அணியாக திகழ்ந்தது. மைசூர் பல்கலைக்கழகம் இரண்டாவது இடத்தையும், கோவை, பாரதியார் பல்கலைக்கழகம் மூன்றாவது இடத்தையும், காட்டாங்குளத்தூர் எஸ்.ஆர்.எம். இன்ஸ்டிடியூட் ஆஃப் சயின்ஸ் அண்ட் டெக்னாலஜி நான்காவது இடத்தையும் பிடித்தன.

போட்டியின் சிறந்த கோல்கீப்பராக கோவை பாரதியார் பல்கலைக் கழகத்தை சேர்ந்த ஷர்வ்யா, மைசூர் பல்கலைக்கழகத்தை சேரந்த பத்மாவதி எஸ் மாட்லி போட்டியின் சிறந்த வீராங்கனையாகவும், அதிக கோல் அடித்த வீரங்கானையாக எம்.எஸ். மானசாவும் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன.

நேற்று மாலை நடந்த பரிசளிப்பு விழாவில் திருச்சி, பாரதிதாசன் பல்கலலைக்கழக துணை வேந்தர் செல்வம் சிறப்பு விருந்தினராக கலந்து வெற்றி பெற்ற அணிகளுக்கு கோப்பை மற்றும் சான்றிதழ்களை வழங்கினார். பல்கலை கழக பதிவாளர் (பொ) காளிதாசன், பேராசிரியர் மற்றும் விளையாட்டு குழு செயலாளர் மெகபூப்ஜான், ஹோலி கிராஸ் கல்லூரி முதல்வர் இசபெல்லா ராஜகுமாரி, போட்டி ஒருங்கிணைப்பாளர் திரவியா கிளாடினா மாவட்ட விளையாட்டு அலுவலர் கண்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.